## தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) வேலூர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை: திரு.அ. ஜெயபாண்டி எம்.எஸ்.ஸி.,(தோ)

செ.மு.ஆணை எண்: அ4/1222/2019 நாள்:05.11.2019

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-IV-ல் அடங்கிய பணிகள் நேரடி தேர்வு 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மை துறை மூலம் தோட்டக்கலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் - வேலூர் தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலக இளநிலை உதவியாளர்களுக்கு – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1. சென்னை, வேளாண்மை இயக்குநர், அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை) அவர்களின் செமுஆ எண்: அநிபி5/139388/2018, நாள்: 05.03.2019
2. இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகள் அபபி2/4193/2019 நாள்: 07.03.019
3. இவ்வலுவலக கடித எண்: அ1/1222/2019 நாள்: 22.03.2019

*******

**ஆணை:**

பார்வை(1) மற்றும் (2)-ல் காணும் செயல்முறை ஆணைகளைத் தொடர்ந்து இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர்களாக பணிபுரிந்து வரும் கீழ்கண்ட பணியாளர்களின் பணியினை பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய பட்டியல் வ.எண் | பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | பணியேற்ற அலுவலகம் | அரசுப்பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | 133 | கோ.பசுபதி<br>இளநிலை உதவியாளர் | தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம், வேலூர் | 13.03.2019 முப | 13.03.2019 முப |
| 2. | 137 | வெ.குமார்<br>இளநிலை உதவியாளர் | | 13.03.2019 முப | 13.03.2019 முப |
| 3. | 157 | கி.ரஞ்சித்<br>இளநிலை உதவியாளர் | | 13.03.2019 முப | 13.03.2019 முப |
| 4. | 182 | சு.கோவிந்தராஜ்<br>இளநிலை உதவியாளர் | | 13.03.2019 முப | 13.03.2019 முப |
| 5. | 215 | ஷ.மணிகண்டன்<br>இளநிலை உதவியாளர் | | 13.03.2019 முப | 13.03.2019 முப |
| 6. | 176 | ரா.கல்வியரசன்<br>இளநிலை உதவியாளர் | | 21.03.2019 முப | 21.03.2019 முப |

2. இப்பணிவரன்முறை சென்னை உயர்நீதிமன்றம், சென்னை/மதுரை கிளைகளில் இந்நியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டது என்றும் உத்தரவிடப்படுகிறது. ("This Regularization is subject to the outcome of the W.P.'s Pending in the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the Post included in Combined Civil Services Examination Group-IV for the year 2015-16, 2016-17 and 2017-18 recruitment").

3. மேற்காணும் பணியாளர்கள் இளநிலை உதவியாளர்கள் (பிணையமற்றது) பதவியில் 2-ஆண்டு கால தகுதிகாண் பருவத்தினை 3-ஆண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும். 2-ஆண்டு பணிகாலத்திற்குள் இளநிலை உதவியாளர்/உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்து இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிட்ட பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டாவது மற்றும் தொடர்காலமுறை ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

5-XI-19

தோட்டக்கலை இணை இயக்குநர் (பொ)
வேலூர்-2.

பெறுநர்

1. திரு.கோ.பசுபதி, இளநிலை உதவியாளர்
2. திரு.வெ.குமார், இளநிலை உதவியாளர்
3. திரு.கி.ரஞ்சித், இளநிலை உதவியாளர்
4. திரு.சு.கோவிந்தராஜ், இளநிலை உதவியாளர்
5. திரு.ஷ.மணிகண்டன், இளநிலை உதவியாளர்
6. திரு.ரா.கல்வியரசன், இளநிலை உதவியாளர்

நகல்: பட்டியல் பிரிவு - இவ்வலுவலகம்
நகல்: பணிப்பதிவேட்டிற்கு
நகல்: இருப்பு கோப்பிற்கு - அ4 பிரிவு

5/11/19